**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE OF CHENGALPATTU**

| SESSIONS CASE No. | 147 | of | 2016 |
|---|---|---|---|

| Deposition of Witness for | Prosecution | PW | 1 | Defence | DW | | Court | CW | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | Elumalai | வயது | | இனம் | |
| தகப்பனார் /கணவர் பெயர் | | | | தொழில் | |
| கிராமம் /முகவரி | | | | மதம் | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the 28th day of August 2025

நாள் :- 28.08.2025 அ.சா. 1 (எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை**

நான் தற்போது திருநிலை கிராமம் மதுரா சீனிவாசரபுரம் என்ற விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய தொழில் செய்து வருகிறேன். என்னுடன் பிறந்த அண்ணன் லட்சுமணன் திருமணம் ஆகாதவா், எங்களுடைய ஆடுகளை மேய்த்து வந்தாா். 22.12.2015 ம் தேதியன்று காலை 10 மணிக்கு ஆடுகளை மேய்க்க சென்றவா் மாலை 6 மணி ஆனபிறகும் வீடு திரும்பவில்லை. ஆனால் ஆடுகள் மட்டும் வீட்டிற்கு திரும்பியதால் ஒரு சில நாட்களில் ஆடுகள் உடல்நிலை சரியில்லாமல் போனால் அவைகளை தூக்கிக்கொண்டு வருவதற்கு காலதாமதம் ஆகும் என்பதால் என் அண்ணனை தேடிக்கொண்டு சென்றேன். நான் திருநிலை ஏரிக்கரை அருகே பெருமாள் என்பவா் கழனி பக்கத்தில் சென்ற போது சிலபோ் அங்கு யாரோ

இருக்கிறார்கள் என்று சொன்னதன் பேரில் நான் அங்கு சென்று பார்த்தேன். அப்போது என் அண்ணன் முகம் நசுங்கி தலையில் அடிப்பட்டு மல்லாந்த நிலையில் ஆடையின்றி இறந்து கிடந்தார். அதை பார்த்தபிறகு நான் என் தாயாரை அழைத்துவர வீட்டிற்கு சென்றேன். என் அம்மாவை அழைத்து வந்து என் அண்ணனை காட்டினேன். அதற்குள் ஊர்மக்கள் போலீசுக்கு தகவல் சொல்லிவிட்டார்கள். போலீசார் அந்த இடத்திற்கு வந்து உடலை கைப்பற்றி சவக்கிடங்கிற்கு அனுப்பினார்கள். என்னை காவல் நிலையம் வந்து யார் மீதாவது சந்தேகம் என்றால் புகார் தரும்படி சொன்னார்கள். என்னிடம் காட்டப்பட்ட புகார் நான் கொடுத்தது தான். மானாம்பதி காவல் நிலையத்திற்கு இரவு 11.30 மணிக்கு சென்று புகார் கொடுத்தேன். அந்த புகார் அ.த.சா.ஆ.1 ஆகும். போலீசார் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு வந்தார்கள். அவர்கள் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றார்கள். புகாரில் கண்ணன் மகன் மூவேந்தன் (எ) தேவா மீது சந்தேகம் இருப்பதாக சொன்னேன். ஆஜர் எதிரி தான் அந்த கண்ணன் மகன் மூவேந்தன் (எ) தேவா ஆவார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் என் அண்ணன் இறந்து கிடந்த இடத்திற்கு சென்று அரை மணி நேரத்திற்கு பிறகு போலீசார் அங்கு வந்தார்கள். போலீசார் அந்த இடத்தை பார்வையிட்டு

விசாரணை மேற்கொண்டார்கள். போலீசார் என்னை விசாரித்தபோது இறந்து கிடந்தவர் என் அண்ணன் தான் என்று சொன்னேன். ஊர்க்காரர்களை விசாரணை செய்தார்களா என்று எனக்கு தெரியாது. என் அண்ணன் இறக்கும் போது அவருக்கு வயது 28 அல்லது 29 ஆகும். எதிரி கல்லூரி மாணவர் என்றால் அது பற்றி தெரியாது. சம்பவம் நடந்து 10 வருடங்கள் ஆகிறது. அப்போது எதிரி கல்லூரியில் படித்து வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் அண்ணன் முரட்டுத்தனமானவர் என்றால் சரியல்ல. எப்படியோ வேறு வகையில் என் அண்ணன் இறந்து போனதற்கு சந்தேகத்தின் அடிப்படையில் எதிரியின் பெயரை சொன்னேன் என்றால் சரியல்ல. எதிரியின் மீதுதேவையில்லாமல் சந்தேகப்படுகிறோம் என்றால் சரியல்ல. என் அண்ணன் இ றந்துபோன ஆதங்கத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

T CHANDRASEKARAN

Digitally signed by T CHANDRASEKARAN
Location: Principal District Judge, Chengalpattu

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE OF CHENGALPATTU

| SESSIONS CASE No. | 147 | of | 2016 |
|---|---|---|---|

| Deposition of Witness for | Prosecution | PW | 2 | Defence | DW | | Court | CW | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | கமலக்கண்ணன் | வயது | | இனம் | |
| தகப்பனார் /கணவர் பெயர் | | | | தொழில் | |
| கிராமம் /முகவரி | | | | மதம் | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the 28th day of August 2025

நாள் :- 28.08.2025 அ.சா. 2 (எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை**

நான் சீனிவாசபுரம், திருநிலை கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 என் அண்ணன் மகன் ஆவார். இறந்து போன லட்சுமணன் அ.சா.1 ன் தம்பி ஆவார். எனக்கு வழக்கு பற்றி தெரியாது. லட்சுமணனை ஏரிக்கரையில் அடித்துப்போட்டு விட்டார்கள் என்று ஊர்க்காரர்கள் சொன்னார்கள். நான் அப்போது வெளியூர் சென்றிருந்தேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை. நான் போலீசாரிடம் வாக்குமூலம் எதுவும் தரவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் 22.12.2015 அன்று காலை 10 மணியளவில் லட்சுமணன் ஆடு மேய்க்க சென்றதாகவும், மாலை 6 மணி ஆகியும் வீடு திரும்பவில்லை என்றும் அவரை தேடி அவரது அண்ணன் லட்சுமணன் திருநிலை ஏரிக்கரை அருகே சென்றபோது பெருமாள் கழனி அருகே குஞ்சப்பழம் செடி அருகே லட்சுமணன் முகம் மற்றும் வாய் ஆகிய இடங்களில் அடிப்பட்டு ரத்த வெள்ளத்தில் இருந்ததை பார்த்து ஏழுமலை வீட்டிற்கு வந்து தகவல் சொன்னதன் பேரில் நானும் சம்பவ இடம் சென்று பார்த்தேன் என்றும், கொலை செய்யப்பட்டுள்ளார் என்று தெரிந்து காவல் நிலையத்திற்கு அ.சா.1 புகார் கொடுத்தார் என்று 23.12.2015 அரசு மருத்துவமனை சவக்கிடங்கு அ ருகே போலீசார் என்னை விசாரணை செய்ததாகவும் அதில் நான் மேற்சொன்ன சங்கதிகளை சொன்னேன் என்றால் சரியல்ல. மறுநாள் 24.12.2015 அன்று மீண்டும் போலீசார் மறு வாக்குமூலம் பதிவு செய்தபோது நான் யாரையும் பெயர் சொல்லி முன் விரோதம் காரணமாக சம்பவம் நடந்திருக்கலாம் என்று சொல்லவில்லை. நான் போலீசார் விசாரணையில் நடந்த விவரத்தை சொனனேன் என்றும், தற்போது ஏழமலை வீட்டாருடன் பகை காரணமாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.

T
CHANDRASEKARAN

Digitally signed by T CHANDRASEKARAN
Location: Principal District Judge, Chengalpattu